சென்னை -40
27.01.2026

அனுப்புநர்

M.பாலச்சந்திரன்
நெ.25, அண்ணா தெரு
சிட்லபாக்கம், சென்னை 600064.

பெறுநர்

உயர்திரு.தலைவர் அவர்கள்
தமிழ்நாடு கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம்
சென்னை.

ஐயா,

பொருள்: எங்கள் மனைஉட்பிரிவுக்கான பதிவு தொடர்பாக - விளக்கம் அளித்தல்.

பார்வை: எங்கள் விண்ணப்ப எண்.TNRERA/PLI/9769/2025 Dated 18.12.2025.

*****

நான் தங்கள் அலுவலகத்தின் என்னுடைய மனை உட்பிரிவுக்கான பதிவு செய்ய விண்ணப்பிருந்தேன். நான் என்னுடைய மனைப்பிரிவு மனை எண்.1, 2 மற்றும் 3ல் ஒரு PEB SHED ஒன்று கட்டி உள்ளேன். **மேலும் அந்த மனைகளை நான் யாருக்கும் விற்பனை செய்யவில்லை.** அதற்கு தங்கள் அலுவலகத்திற்கு கீழ்கண்ட விளக்கத்தை தருகிறேன்.

அந்த கட்டிடத்திற்கு மறைமலை நகர் நகராட்சியில் உரிய கட்டிட அனுமதி 02.06.2025ல் வாங்கி உள்ளேன். (உ.ஆணை எண்.020/BL/2025/00069).

அந்த கட்டிடம் Kun Auto Company Pvt. Ltd., என்ற நிறுவனத்திற்கு 01.12.2025 முதல் 30.11.2034 வரை 9 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட்டு உள்ளேன். மேலும் 30 ஆண்டுகள் வரை குத்தகைக்கு விடலாம் என விதிமுறை உள்ளது என்பது குறிப்பிடதக்கது. அந்த மனையை என் பெயரிலும் என் மகன்கள் பெயரிலும் உள்ளது. என் மகன்கள் எனக்கு பவர் பத்திரம் செய்து கொடுத்துள்ளனர்.

எனவே தாங்கள் இந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டு என்னுடைய மனைப்பிரிவை பதிவு செய்து வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

M. Balachandran